IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.210/2017

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VIJAYRAGAVAN |
| FATHER'S NAME | : | VENKATRAMAN |
| VILLAGE | : | THIRUPPATUR |
| OCCUPATION | : | MANAGER |
| AGE | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 26th day of March 2024.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் திருப்பத்தூரில் குடியிருந்து கனரா வங்கி ஆம்பூர் கிளையில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கானது யாருடைய பெயரில் உள்ளது என்றால் ஆர். சேகர் என்ற பெயரில் உள்ளது. அவரது தகப்பனார் பெயர் ரங்கசாமி, முகவரி 1/123, பெரிய கொம்பேஸ்வரம், சாத்தாம்பாக்கம், ஆம்பூர் ஆகும். மேற்படி சேகர் என்பவரின் வங்கி கணக்கின் 01.11.2016 முதல் 19.11.2016 வரை நடைப்பெற்ற பணப்பரிவர்த்தனைகளை காட்ட அதனை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றேன் அது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரிதரப்பில் சாட்சிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் மேற்படி ஆவணத்தை கொண்டுவர சொல்லி கோரப்படவில்லை என்பதால் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது). மேற்படி சேகர் என்பவரின் வங்கி கணக்கிற்கு அளிக்கப்பட்ட காசோலைதான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு தற்போது வரை செயல்பாட்டில் உள்ளது. மேற்படி காசோலையை பணமாக்காதவாறு நிறுத்தக்கோரியோ, காணாமல் போனாதாகவோ கோரிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை. இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள காசோலை யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எங்கள் பதிவுகளில் கிடையாது. அழைப்பாணையில் எதிரி செய்து கொடுத்த கையொப்பம் வங்கி ஆவணங்களில் ஏதேனும் இருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்க சொல்லி கேட்கப்பட்டதால் அவரது கையொப்பம் அடங்கிய ஆவணத்தின் உண்மை நகலை அ.சா.ஆ.10 குறியீடு செய்கிறேன். எதிரி தனது கையெழுத்தை மாற்றக்கோரி விண்ணப்பம் அளித்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் மேலே கூறியுள்ள விவரங்கள் எதுவும் நேரடியாக எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எதிரியின் வங்கி கணக்கிற்கு இவ்வழக்கின் காசோலை அளிக்கப்பட்டதற்கு அவரிடம் ஒப்புகை எதுவும் பெறப்படவில்லை என்றால் அது

குறித்து ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். அழைப்பானை பெற்ற பிறகு அது குறித்து ஆவணங்களை சரிபார்க்கவில்லை. முதல் விசாரணையில் எதன் அடிப்படையில் காசோலை எதிரியின் வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்டது என்று கூறினேன் என்றால் ஆன்லைனில் பார்த்து தெரிவித்தேன். இந்த காசோலையை குறிப்பு எழுதி திருப்பிய அதிகாரிக்கு தான் அந்த விவரம் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலை அ.சா.1ல் கொடுக்கப்பட்டுள்ள வருடம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் பெயரின் அருகாமையில் ஏழு லட்சத்தி என்று எழுதப்பட்டு நிருத்தி உள்ளார்கள் என்றாலும் இருபத்தி ஐந்தாயிரம் என்பதை அடுத்த வரியில் எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான். ரூபாய் என்ற இடத்தில் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெயரும், தொகையும் வேறுவேறு கையெழுத்தில் உள்ளது என்றால் பார்ப்பதற்கு வித்தியாசமாக உள்ளது. எண்ணால் எழுதப்பட்டுள்ள தொகையில் ஏழு என்பது பின்னிட்டு சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு கூற இயலாது. இந்த காசோலை அதில் இடப்பட்டுள்ள கையொப்பம் வங்கி ஆவணங்களில் உள்ள கையொப்பத்தோடு ஒத்துப்போகவில்லை என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாத விவரங்கள் குறித்து நான் சாட்சியம் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்,/– ஜோ. ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.